| | | பக்கம். |
|---|---|---|
| ரு. | சிவகாமியம்மையார் | கசுஅ |
| சு. | தக்ஷிணாமூர்த்தி | ,, |
| எ. | சுப்பிரமணியக்கடவுள் | கசுகூ |
| அ. | வைரவக்கடவுள் | களங |
| கூ. | திருநந்திதேவர் | ,, |
| க0. | திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் | ,, |
| கக. | திருநாவுக்கரசுநாயனார் | களச |
| கஉ. | சுந்தரமூர்த்திநாயனார் | ,, |
| கங. | மாணிக்கவாசகசுவாமிகள் | ,, |
| கச. | நால்வர் | களரு |
| கரு. | அறுபத்துமூவர் | ,, |
| கசு. | சண்டேசுரர் | ,, |
| கஎ. | சரசுவதி | ,, |
| கஅ. | இலக்குமி | களசு |
| ககூ. | சூரியமூர்த்தி | ,, |
| உ0. | சேக்கிழார்நாயனார் | ,, |
| உக. | மெய்கண்டதேவர் | களஎ |
| உஉ. | திருநீற்றுப்பதிகம் | களஅ |
| உங. | கோளறுபதிகம் | கஅ0 |
| உச. | திருவெம்பாவை | கஅச |
| உரு. | மாகேசுரபூசையில் ஓதத்தக்க பெரியபுராணச் செய்யுள் | ககூக |
| உசு. | மாகேசுரபூசையாசீர்வாதம் | ககூச |

டலரயனுந்திருமாலுங்காணுமைமதிமயங்கப்
புலிமுனியும்பதஞ்சலியுங்கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந்தருந்தில்லைக்குடதிசைக்கோபுரவாயில்
நிலவியகற்பகக்கன்றினிறைமலர்த்தாளிணைபோற்றி.

தன்னேங்குமலரடியுந்தளிரோங்குசாகைகளும், மி
ன்னேங்குமுகக்கொம்புமிரவியகண்மலர்களுமாய்,ம
ன்னேங்கநடமாடுமன்றேங்குமதிற்குடபாற், பொன்
னேங்கன்முன்னேங்கும்பொற்பமர்கற்பகம்போற்றி.

திருவுங்கல்வியுஞ்சீருந்தழைக்கவும்
கருணைபூக்கவுந்தீமையைக்காய்க்கவும்
பருவமாய்நமதுள்ளம்பழுக்கவும்
பெருகுமாழத்துப்பிள்ளையைப்பேணுவாம். (எ)

நல்லசொற்பொருளுநடாத்தவும்
எல்லைகாணரும்பேரின்பமெய்தவும்
வெல்லும்யானைமுகத்தினைமேவிவாழ்
வல்லபைக்குரியானைவழுத்துவாம். (அ)

மாற்றரியதொல்பிறவி மறிகடலி னிடைப்பட்டுப், போற்றுறுதன்குரைகழற்றூட் புணைபற்றிக்கிடந்தோரைச், சாற்றரியதனிமுத்தித்தடங்கரையின்மிசையுய்ப்பக், காற்றெறியுந்தழைசெவியகடாக்களிற்றைறவணங்குவாம். (கூ)

குழவிவெண்பிறைமிலைச்சியோற் குணித்தமாதவத்தின்
இழைதடம்புனலருவிதாழிமையமீன்றளித்த
மழைமதர்த்தகண்மரகதப்பசும்பிடிபயந்த
தழைமடற்செவித்தந்திபொற்சரணமேசரணம். (கO)

ஆரணங்கண்முடிந்தபதத்தானந்தவொளியுலகிற்
காரணங்கற்பனைகடந்தகருணைதிருவுருவாகிப்
பேரணங்கினுடனாடும்பெரும்பற்றப்புலியூர்சேர்
சீரணங்குமணிமாடத்திருச்சிற்றம்பலம்போற்றி. ( )

தற்பரமாய்ப்பரபதமாய்த்தாவிலநுபூதியதாய், அற்புதமாயாரமுதாயானந்தநிலயவொளிப், பொற்பினதாய்ப்பிறிவிலதாய்ப்பொருளாகியருளாகுஞ், சிற்பரமாமம்பரமாந்திருச்சிற்றம்பலம்போற்றி. (எஎ)

சீராருஞ்சதுர்மறையுந்தில்லைவாழந்தணரும்
பாராரும்புலிமுனியும்பதஞ்சலியுந்தொழுதேத்த
வாராருங்கடல்புடைசூழ்வையமெலாமீடேற
ஏராருமணிமன்றுளெடுத்ததிருவடிபோற்றி. (எஅ)

நீர்தாங்குபார்தாங்குநெடுமாலுமலரயனுநிரந்துபோற்ற, வார்தாங்குபுளகமிகுகளபமுலைமலைவனிதைமகிழ்ந்துகாணத், தார்தாங்குசடாமவுலிநிலவெறிப்பப்பொதுவினடந்தயங்காநிற்குஞ், சீர்தாங்குவேதாந்தநாதாந்தப்பாஞ்சுடரைச்சிந்தைசெய்வாம். (எகூ)

உருவமொருநான்காகியுருவருவத்திருவுருவமொன்றேயாகி, அருவமொருநான்காகியப்பாலா யெப்பாலுமளவிடாத, பொருவிகந்தவுயிர்களொறும்புணராதுபுணர்ந்தருளேபொழிந்தெல்லோருங், கருதரியதிருச்சிற்றம்பலத்திலகும் பேரொளியைக் கருத்துள்வைப்பாம். (அ0)

உண்மையறிவானந்தவுருவாகி யெவ்வுயிர்க்குமுயிராய்நீரின், றண்மையனல்வெம்மையெனத்தனைய

